தேதி.13.02.2020



<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S.No.241/2018 வா.சா.1 திரு.பழனிச்சாமி

<u>வா.சா.1 நீதிமன்ற அனுமதியின் படி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>

நான் தாண்டாம்பாளையத்தில் குடிருந்து வருகிறேன். தாவா சொத்தில் நான் குடியிருக்கிறேனா என்றால் தற்போது இல்லை. பிரதிவாதி வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்றுவிட்டதாக நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்தின் மதிப்பீடு அரசு வழிகாட்டுதல் மதிப்பை பார்த்து நீதிமன்றம் கட்டணம் செலுத்தினேன் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு கடனாக பணம் கொடுத்து அடமான கடன் பத்திரம் எழுத கூட்டிச்சென்று கிரயமாக அவரை ஏமாற்றி எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. தினத்தந்தி நாளிதழில் வந்த விளம்பரத்திற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். என்னை மாவட்ட அலுவலக ஆட்சி அலுவலகத்திலிருந்து விசாரணைக்கு என்னை அழைத்தார்களா என்றால் இல்லை. அடமான கடன் எழுதுவதாக அழைத்துச்சென்று பிரதிவாதியை ஏமாற்றி நான் பெற்ற கிரய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

ஒ/ம். திரு.பழனிச்சாமி PW1

ஒ/ம். P. ஈஸ்வரமூர்த்தி
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்